ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

केयूराणि न भूषयन्ति पुरुषं हारा न चन्द्रोज्वलाः
न स्नानं न विलेपनं न कुसुमं नालंकृता मूर्धजाः ।
वाण्येका समलङ्करोति पुरुषं या संस्कृता धार्यते
क्षीयन्तेऽखिलभूषणानि सततं वाग्भूषणं भूषणम् ॥

புருஷனை தோள்வளைகளலங்கரிக்கமாட்டாது. சந்திரன்போல் பிரகாசிக்கும் சிறந்த முத்து ஹாரங்களும் விளங்கும்படிசெய்யாது. அதுவல்லாமலும், ஸ்நானம்செய்வதும் உயர்ந்த வாஸனையுள்ள சந்தனத்தைப் பூசிக்கொள்வது, புஷ்பங்களைத் தரிப்பது, சிரஸில் அதிககேசங்களை வளர்த்துக்கொள்வது முதலிய இத்தகைய காரியங்களாலும் புருஷனுக்கு அலங்காரம் ஏற்படாது. சாஸ்திரம் ஆசார்யர் இவர்களால் நன்கு சுத்தம்பண்ணப்பட்ட வாக்கு ஒன்றுதான் அலங்காரத்தை யுண்டுபண்ணும். இஃதன்றி மற்ற ஆபரணங்கள் எவ்வளவிருப்பினும், அவைகளால் சோபை யேற்படாது. வாக்கெனப் பெயர்கொண்ட இந்த ஒரு பூஷணமே எப்பொழுதும் சிறப்புற்றிருக்கும்.

உலகிலுள்ளோர்களில் பெரும்பாலோர் தமக்கு சோபை யேற்படவேண்டுமெனக் கருதி, பலவிதமான அலங்காரங்கள் செய்துகொள்கிறார்கள். அவைகளில் முற்காலத்திலேற்பட்ட பலவிதமான ஆபரணங்களைத்தவிர, தமிழ்பாஷையில் சரியான பெயரால் வழங்கமுடியாத அநேக சாமான்களை கால், கை, இடுப்பு, கழுத்து, தலை முதலான இடங்களில், மேநாட்டு நாகரீகத்தைக் கைப்பற்றிய சிலர் அணிந்துகொள்ளுகிறார்கள். அதனால் பொருட்செலவும் சரீரசிரமுமேயல்லாது, வேறு பயனிருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், அன்னோரைப் பார்க்கும் சில பாமர ஜனங்களுக்கு ஒருவிதமான ஆச்சரியமும் திருப்தியும் உண்டாகலாம். அதைப் பயனற்றதென்று விலக்கி ஆசார்யர்களாலும், சாஸ்திரங்களாலும் நன்கு சுத்தம்பண்ணப்பட்ட வாக்கொன்றுதான் புருஷனுக்கு எப்பொழுதும் சிறந்த அலங்காரமெனக்கருதி அதையடைவதில் முயற்சிக்கவேண்டும்

ஆர்யதர்மம்.

ருதிரோத்காரி-ஹூ மார்கழி-மீ உகூவ

கெட்ட குணங்களால்

கஷ்டங்கள் நேரும்.

जरा रूपं हरति हि धैर्यमाशा मृत्युः प्राणान् धर्मचर्यामसूया। कामो ह्रियं वृत्तमनार्यसेवा क्रोधः श्रियं सर्वमेवाभिमानम्॥ भा-२. अ-३७.

மனிதர்களுக்கு முதிர்ந்தவயது வந்தால் சரீரத்தின் மேனியைப் போக்கும். அபிமானமானது தைரியத்தைத் தள்ளிவிடும். இயமன் வந்தால் பிராணனை அபகரிப்பான். அஸூயை யிருந்தால் தர்மகாரியத்தில் பிரவிர்த்தியைக் குறைக்கும். ஸ்திரீவிஷயமான இச்சையிருப்பின் லஜ்ஜையை விலக்கிவிடும். கெட்டவர்களின் பழக்கமானது நன்னடக்கையைத் தடுக்கும். அதிகக்கோபமிருந்தால் ஐசுவரியத்தைத்துரத்திவிடும். நாம் என்கிற அகங்காரமிருப்பின் அது எல்லாவற்றையும் கெடுத்துவிடும்.

இதனால் அறிவிக்கப்படுவது யாதெனில், மானிடப்பிறவியை யடைந்தவர்களுக்கு இவ்வுலகிலோ, பரலோகத்திலோ, வேண்டிய சுகங்களைப்பெறுவதற்குச்சிறந்த ஸாதனங்களைப் பகவான் கொடுத்திருக்கிறார். அவைகளைக்கொண்டு நாம் பெற வேண்டியதைப் பெறாமல், விபரீதமான பயனை யடைகிறோம். அவற்றுள் ஜரை, இதைப்போலுள்ள மிருத்யு இவையிரண்டும் நம்மால் சுலபமாய் விலக்கக்கூடியதல்ல. மற்றவைகளைக் கவனிப்பாம். அவசியமிருக்கவேண்டிய ஆத்மகுணங்களில் தைர்யமொன்றாகும். இது யாவருக்கும் இன்றியமையாததே. எனெ

னின், பாபகன்மங்களுடைய சம்பந்தமும் சேர்ந்துதான் இச் சரீரம் ஏற்பட்டிருப்பதால், அதன்பயனான கஷ்டங்கள் வந்தால் அச்சமயத்தில் சரீரமென்றால் அதற்கு விபத்தும் இயற்கைதானென்று இதை உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று (**विपदि धैर्य)** என்று சான்றோர் கூறுகின்றனர். இத்தகைய தைர்யம் யாதாகிலுமோர் வஸ்துவின்மீதுள்ள நமது மிதமிஞ்சிய அபிமானத்தினால் அபகரிக்கப்படுகிறது. அஸூயையென்பது ஸத்யமாயிருக்கும் குணங்களில் தோஷத்தைக் கூறுவது. உண்மையாகவே ஒருவரிடம் தோஷமிருந்தாலும், அதைப்பற்றி நாம் பேசப்புகுவது தப்பு. தோஷமற்ற நற்குணம் பொருந்தியவரை நாம் தூஷிப்பதென்றால், எப்பொழுதும் இந்த வேலையைத் தவிர தர்மானுஷ்டானத்திற்கு அவகாசமேகிடைக்கமாட்டாது எனக்கருதியே அஸூயை தர்மானுஷ்டானத்திற்குச் சத்துருவென்று கூறப்பட்டிருக்கிறது. ஸ்திரீவிஷயமான இச்சைக்குக் காமம் என்று பெயர். இஃது விதிப்படி மணம்புரிந்த பத்னியிடத்தில் கூறப்பட்ட காலங்களில் இருக்குமாகில், அது உசிதமே. அவ்விதமன்றி விதியையும், பாபத்தையும் சற்று முற்று நோக்காமல் விலங்கினம்போல் தோன்றியபடி எப்பொழுதும் வரைகடந்துகாமுகனாயிருப்பானாகில் அவனுக்குலஜ்ஜை இருக்கமாட்டாது. **कामातुराणां न भयं न लज्जा** என்று அறிஞரும் சாற்றியுள்ளார். **अनार्यसेवा** சாஸ்திரார்த்தங்களுக்கும், சிஷ்டாசாரங்களுக்கும் முறனாய்த் தனக்குத் தோன்றியபடியெல்லாம் கெட்ட நெறிகளில் நடப்போர் அநார்யர். அவருடைய பழக்கம் நமக்கிருக்குமாகில், வெகுசீக்கிரத்தில் அவர்செல்லும் தீயவழிகளில் விழுக்துவிடுவார்கள். அதனால் நம் நடத்தை கெடும். இக்கருத்தைக்கொண்டுதான்

दुर्जनः परिहर्तव्यो विद्ययाऽलंकृतोऽपि सन् ।

கல்வியால் அலங்கிருதனாயிருந்தாலும், துர்ஜனனை விலக்க வேண்டுமென்று ஓர் கவி கூறுகின்றார். கோபம், பொறுமை

பின்மை, பிறர் நம்மை நிந்தித்தாலும், அதைப் பொருட்டாக நினையாமல் பொறுமையுடனிருக்கவேண்டும். அவ்விதமன்றி கோபமுண்டானால் அவனை நாமும் நிந்திக்க இருவருக்கும் சச்சரவுண்டாகி கோர்ட்டுமுதலிய இடங்களுக்குப்போய் கையிலிருக்கும் பொருளை முழுதும் இழப்பதே அதன் முடிவாகும், இக் கருத்தையே ஔவையம்மையும் "ஆறுவது சினம்" என்று கூறியிருக்கிறாள். நாம் என்கிற அகங்காரம் ஒருவருக்கிருப்பின் குணம், கீர்த்தி, பொருள், பந்து, மித்திரன், பரலோகசிரேயஸ் முதலான யாவற்றிற்கும் இடையூறுறும். ஆகையால் இதற்கு இடங்கொடுத்தலேகூடாது. இங்கு கூறப்பட்ட ஆசை, அருவை, காமம்முதலானவைகளால் நமக்கேற்படும் அனர்த்தங்களை நன்குணர்ந்து அவைகளுக்கு நம் மனதில் இடங்கொடாமல் நீக்கி நற்குணங்களை யவலம்பித்து சிரேயஸ்ஸை யடையவேணுமாய்ப் பிரார்த்திக்கிறோம்.

மறுபிறப்பு.

(௬௰௨-வது பக்கத்தொடர்ச்சி.)

௧௮-வது ஜன்மாந்தர ஞாபகம் உண்டு.

இங்கு முழுமோசமாய் ஞாபகம் இல்லையென்பதைக்காட்டிலும் கொஞ்சமிருக்கிறதென்று சொல்கிறேன். அப்பாடா சந்தோஷம் சீக்கிரம் சொல்லுங்களென்பீரோ அவசரமின்றிக் கேளும், எந்தஜன்மத்திலும் இடைவிடாது அப்பளித்த சாப்பாடு என்பதையும் உறக்கமென்பதையும் மட்டிலும் மறக்காமற் கொண்டுவந்தோம். இதென்னையா, ஏதோ சொல்லப்போகிறீரென்றாவலுற்றவும் இதைச்சொன்னீரே இதில் ஒன்றும் அர்த்தமில்லையென்பீரோ இன்னுமொன்றும் சொல்கிறேன். ஆத்மாவென்றவன் நம்மனதில் இருக்கிறான் என்று யாவருமறிந்து கொண்டிருக்கிறார்களென்றும் இரண்டாவதாகச்சொல்கிறேன்.

இதென்ன மகா மோசமாம் அபேக்ஷதேனென்ற நியாயமாச்சுதே, முதற்சொன்னதே புரியவில்லை என்றபோது 2-வதும் என்னவோ சொல்கிறீரோ என்றால் இரண்டிற்கும் ஸமாதானம் சொல்கிறேன் கேள்.

நமது குழந்தை பிறந்தவுடன் பசியினால் அலற ஆரம்பிக்கின்றது, அப்போது தாயானவள் அதையெடுத்து ஸ்தன்யத்தைக் கொடுக்கிறாள் அப்போது அழுகையை நிறுத்திவிட்டு பாலருந்துகிறது. இங்கு ஊன்றிப்பார் இக்குழவிக்கு முன் பல ஜன்மங்களில் பசித்தபோது ஆகாரம்செய்வதென்ற இடைவிடாத ஓர் அப்பியாஸத்தாலல்லவா பாலை அருந்த ஆரம்பித்தது, புதிதாய்ப்பிறந்திருந்தால் அது எப்படித்தெரியும், தெரியாததை அப்யாஸம் செய்தாலொழிய ஒருபோதும் வரமாட்டாதென்பது திண்ணம். ஆனால் தாய் முலையை வாயிற்கொண்டு வைக்கிறாள் அதனால் குடிக்கிறதென்றால் அதல்ல அவள்வைத்தவுடன் அவனுடன் நாக்கை முன்னிறுத்தி உறிஞ்சவேண்டுமென்பதையுஞ்சொல்லிவைத்தாளா என்ன? ஆச்சரியம்! மனிதர்களில் தான் தாயார் ஸ்தன்யத்தைக்கொடுக்கிறாள் நம் வீட்டில் பசு கன்றுபோடுகிறதே. அது ஈன்றதும் அக் கன்று கொஞ்சநேரம் வேதனையினால், மூர்ச்சையாய்க்கிடந்து பிறகு மெள்ளக்கண்ணை விழித்துக்கொண்டு தட்டித்தடுமாறித் தலைகீழே பாய்ந்து காற்றுப்படப்பட கால் வலுவை அடைந்ததும், தாயை நோக்கிச் சென்று தாயின் பால்மடி இருக்குமிடத்தைத் தேடிக்கொண்டு, ஏதோ வைத்தவன் சாமானை இடமறிந்து மறுபடியும் வந்து எடுப்பவன்போல், பால்மடியை அடைந்து உறிஞ்ச ஆரம்பிக்கிறதே. இது ஒன்றே நமக்குப்போதாதா? இதிலிருந்தே நாம் வைராக்யத்தை ஸம்பாதிக்கக்கூடாதா? இங்கு நாம் கன்றைத் தூக்கிவிடுகிறோமென்றால் சிவசிவ இன்னும் ஸம்சயமா? நாம் உறங்கும்போது கன்றை ஈன்றுவிடுகிறதையும், நாம் காலையிற் போய்ப் பார்க்கும்போது அது பாலைக்குடித்துவிட்டு துள்ளி விளையாடுவதையும் கண்டிருக்கிறோமே. நல்லது காட்டிலிருக்கும் புலிமுதலியவைகளின் குட்டியையும் நீதான் தூக்கிவிடுகிறு

யோ? இன்னொன்று இங்கு கவனிக்கத்தக்கது. ஜன்மாந்தரானுபவமில்லாமல் புதிதாய் ஒன்று உண்டாவதாய் இருந்தால், பிறந்தவுடன் பயமும் நடுக்கமும் உண்டாகும். ஏனெனில், இப்பிரபஞ்சத்தை இப்போதுதான் புதிதாய்ப்பார்க்கிறோம். ஆகா! இதென்ன காடு என்று மிருகம் நினைக்கலாம். மனிதனும் வீட்டைப்பார்த்து பிரமிக்கலாம். இரண்டுமில்லை. காட்டிற்பிறந்த குட்டி எத்தனையோ தடவை அவைகளைக் கண்டிருப்பதால், பழகின வஸ்துவென்று வெருளுகிறதில்லை. நம்மை ஈன்றவள்தான் நம்மை வளர்ப்பாளென்று முதலில் அங்கு செல்கிறது. இப்படியே நாம் எத்தனையோ தடவை செத்திருப்பதால் மரணத்திலும் நமக்கு பயமிருக்கிறது. மரணமடைந்தபிறகு நாமனுபவிக்க வேண்டிய கஷ்டங்களின் வரிசைதான் அப்படிபயப்படச்செய்கிறது. ஆனால் பிள்ளை பெண்டீர் சொத்து மனையை விட்டுப் போவதற்காக பயப்படுகிறோமென்றால், அதல்ல, இதற்கு உதாரணம்—நாம் வேண்டாம், காட்டுமிருகங்களையும் பக்ஷிகளையும் எடுத்துக்கொள்வோம். காட்டில் ஒரு வெடிச்சத்தம் கேட்டவுடன் அங்கிருக்கும் பறவைகளும் மிருகங்களும் படுகிற பாட்டைப்பார்த்ததில்லையோ. ஏன் அப்படிப்படவேண்டும் காரணத்தைகவனி. நாம் சாவோம் பிறகு அனுபவிப்போம் யாதனைகளை என்றுதான். ஆனால் அப்படிப்பட்ட ஞானத்தோடா ஓடுகிறதென்று அந்தஞானமிருந்தாலும் சரி இல்லையென்றாலும் சரி வேறுகாரணம் நீ சொல்லாதவரை எதைக்காரணமாய் வைக்கிறது ஆனால் உண்மையில் அந்தஞானம் அதற்குத்தெரியாமலே அவைகளிடத்திலிருந்து கொண்டுதான் அப்படி நடுங்கச்செய்கிறதென்பதை இதனால் தெரிந்துகொள். எல்லோருக்கும் ஆன்மா மனதிலிருக்கிறானென்பது தெரிகிறதென்று முன்னற்கூறினேன் அதைகவனித்தால் இது ஸமாதானமாய்விடும். பாருங்கள் கேவலம் காட்டுமிராண்டியாய் ஞானமில்லாதமூடன் கூடப்பிறனோடு கோபாவேசம் கொண்டு பேசித்தன்னைப்புகழ்ந்துகொள்ளும்போது 'நான்யார் தெரியுமாவென்று என்னசெய்கிறான் விட்டேனுபார் என்றும் மார்பிலேயே தட்டுகிறான்மற்று

தலையில் தட்டுகிறதில்லை. வயிற்றிலடிக்கிறதில்லை. மார்பிலேயே தட்டுகிறான் இதனாலேற்பட்டதென்ன ஆத்மா ஹிருதயத்தில் வஸிக்கிறானென்று

ईश्वरः सर्वभूतानां हृद्देशेऽर्जुन तिष्ठति ।

என்ற கீதாசுலோகத்தைக் கேட்காமலே தெரிந்துகொண்டிருக்கிறான். ஆனபடியால் நமக்கும் முன் ஜன்மங்களிற்செய்த ஆகாரப்பழக்கமும் அப்போதனுபவித்த யாதனையின் நடுக்கமுமிருக்கிறதென்பது திண்ணம். ஆரியர்களே! இவ்விஷயத்தைப்பற்றி இலகுவில் முடிக்கமுடியாது. இன்னும் எவ்வளவோசொல்லலாமாயினும் நம் ஆர்யதர்மம் பத்திரிகையில் இவ்வருட முடிவோடு நம் மறுபிறப்பும் முடிந்துவிடவேண்டுமென்று கொண்டுமட்டிலும் இம்மறுபிறப்பை ஆசிரியனருளால் முடித்துக்கொள்கிறேன்.

எம் என். சுப்பிரமணியசாஸ்திரிகள்.

வான் சிறப்பு.

यतः सुवर्षजाज्जलाज्जगत्सुखेन जीवति ।
ततोऽमृताभिधां दधे तदत्र लोकघोषिताम् ॥१॥

மழைநீங்காமல்பெய்ய உயிர்கள் நிலைபெற்று வருகையால்
அம்மழை யுயிர்களுக்கு அமிழ்தம் ஆகின்றது.

எக்காரணத்தால், வருங்காலத்தில்வேண்டியவளவு மேகம்வர்ஷிப்பதாலாகியநீரால்ஸ்தாவரம்,ஜங்கமம்என்று இருவகைப்பட்ட சரீரத்திலுள்ள ஜீவராசியானது [illegible] யாஸமின்றி ஜீவிக்கின்றதோ, அக்காரணத்தால், அந் நீரானது இம்மண்ணுலகில் யாவராலும் செவ்வனே அறியக்கூடிய அமிழ்தம் என்ற பெயர் வாய்ந்ததாகிறது. जीवति என்ற பதத்தால் பிராணனை தரிக்கச் செய்கிறது என்று தெளிவாய் அதன் பயன் சொல்லப்பட்டதாகிறது.

अमृतम् என்ற வடமொழிச்சொல்லானது மானவர்களுக்கும் வானவர்களுக்கும் பிராணாதாரமான நீருக்கும் அமிர்தத்திற்கும் பொதுவாய் விளங்குகிறது. விண்ணுலகில்வாழும் வானவர்களுக்கு அமிர்தமெப்படியோ, அப்படியே மண்ணுலகில்வாழும் மானவர்களின் பிராணனை ரக்ஷிக்குந் திறமை வாய்ந்திருப்பதால் மழையாலாகிய நீரும் அமிர்தம் எனக் கூறப்படுகிறது. पयः कीलालममृतं என்று அமரகோசத்தில் ஜலத்திற்கு அமிர்தம் என்ற பெயர் பிரஸித்தமானது. மேல்வரும் ச்லோகத்தாலும் இக் கருத்து விஸ்தரிக்கப்படுகிறது.

बुभुक्षितस्य भक्षणं भकरस्य सस्यपूर्वकम् ।
प्रयाति भक्ष्यतां जलं सुवृष्टिसम्भवं स्वयम् ॥२॥

உண்பவர்களுக்கு நன்மையாகிய உணவுகளையுண்டாக்கி, அவ்வுணவை உண்பவர்க்குத் தானும் உணவாக நிற்பது மழையே.

பசியுந் தாகமும் ஜீவராசிக்குப் பெரிய பிணிகளாயுள்ளன. அவைகளுக்குத் தினந்தோறும் புசிப்பதும் நீர் அருந்துவதுமே மருந்தாகின்றது. இல்லாவிடில், ஜீவர்கள் தாளுகிலே உயிர் துறப்பார்கள். மேகத்தால் வர்ஷிக்கப்பட்ட ஜலமானது, பயிர்பச்சை முதலானவை வளரக் காரணமாயிருந்துகொண்டு குடிக்கத்தக்கதாகவும் ஆகிறது. சூரியனுடைய வெப்பத்தாலாகிய பசி தாகங்களைப் போக்கி, மரிக்காமல் உயிர்களை ரக்ஷிக்கிறது.

புசிப்பதற்கும் குடிப்பதற்கும் அதிக பேதங் கிடையாது. கண்டத்திற்குக்கீழ் சேர்வது இரண்டிற்கும் துல்யமாகவேதானிருக்கிறது. अब्भक्षः वायुभक्षः என்று நீர் அருந்துவதிலும் भक्षधातु-வின் பிரயோகம் காணப்படுகிறது. இவ்விதம் அன்வயமுகமாய், நீர் ஜீவிக்க சாதனமென்று கூறப்பட்டதாகிறது. வ்யதிரேகமாயும் மேல்ச்லோகத்தால் அறிவிக்கப்படுகிறது.